## Zesta குடிநீர் விளம்பரம் Script (30 Seconds)

**காட்சி-** [காலை நேரம் நேர்த்தியான வீட்டின் சமயலறை(kitchen). கணவன் தேநீர் ஊற்றுவதற்காக, kettle ஐ அடுப்பில் வைக்கின்றான்.]

[மனைவி சிரித்த முகத்துடன் சமயலறை உள்ளே வருகின்றாள். கணவன் அவளைப் பார்க்கின்றான்]

**மனைவி:** "தேநீர் ஊற்றுவது என்பது ஒரு கலை. அந்தக் கலையை நீங்கள் மனதால் உணர்ந்து செய்தால் தான் அதன் சுவையில் ஒரு திருப்தி கிடைக்கும், (தண்ணீர் நன்றாகக் கொதித்து நீராவி வரவேண்டும்….")

**காட்சி-** [kettle சப்தம் கேட்கப்பட்டு, நீராவி வெளிவந்துகொண்டிருந்தது.]

**மனைவி:** இந்த சப்தம் சொல்லும், தேநீருக்காகத் தண்ணீர் தயாராக உள்ளது என்று.

[அதன் பின் மனைவி Zesta Tea Packet யினை எடுத்து அதற்குள் இருந்து ஒரு கரண்டியால் தேயிலைத் தூளை எடுத்து நம் இருவருக்கு ஒரு மேசைக்கரண்டி போதும், என்று சொல்லிக்கொண்டே அதனைத் தண்ணீர் குவலையில் இடுகின்றாள்.]

**காட்சி-** [தேநீர் தூளானது கொதிநீருடன் கலந்து அழகாக நிறம் மாறிக்கொண்டிருக்கிறது.]

**மனைவி:** சரியான சுவைக்கும், நிறத்திற்கும் காத்திருப்பு அவசியம். (ஐந்து நிமிடம்)

இதற்கிடையில் கணவன் மனைவியின் புகைப்படத்தில் மீதமுள்ள கடைசி வரைபடத்தை வரைந்து முடித்து விடுகின்றான். (ஒரு வேலை முடிக்காமல் இருந்ததனை முடித்துவிட இந்த ஐந்து நிமிடம் போதும்.)

**காட்சி-** [தேநீர் சரியான பதத்துடனும் நிறத்துடனும் வந்துவிடுகின்றது.]

[கணவன் சும்மா இருக்கும் ஒரு தேநீர் கோப்பையை கையில் எடுத்தான். அப்போது,]

**மனைவி:** இது இல்லை… தேநீர் கோப்பை என்பது எமது வழக்கமான கோப்பையாக இருக்கவேண்டும், அதனை மாற்றிவிடக்கூடாது. "தேநீர் கோப்பைக்கும், எமக்குமான உறவு என்பது அலாதியானது." என்று கூறி, மனைவி வழமையான தேநீர் கோப்பையில் தேநீரை ஊற்றிவிட்டு,

(இது Zesta Tea யிற்கான நேரம் என்கின்றாள்.)

பின் அவள், வாருங்கள் அங்கே அமர்ந்துகொள்வோம் என்று கணவனிடம் கண்ணசைவினால் உணர்த்த இருவரும் ஓர் அழகான இடத்தில் அமர்ந்துகொள்கின்றனர்.

பின் மனைவி கணவனிடம் தேநீரைப் பருகுவதற்கு முன் அதன் வாசனையை நுகர்ந்து பார்க்க வேண்டும், அப்போது தான் தேநீரின் சுவையை முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும் என்கின்றாள். பின் கணவன் தேநீருடைய வாசனையை உணர அவன் அருமையான உணர்வை உணர்ந்துகொள்கிறான்.

(பின் இருவரும் தேநீர் அருந்துகின்றனர்)

**காட்சி முடிவு-** Zesta logo- and Sloyan காட்சிப்படுத்தல்.

**Nifrina Nasim**
Attorney-at -Law
Reading Master Degree in MLRHRM